23rd February 1961]

Sri A. VEDARATHNAM : ஸிலோன் ரிபாட்ரியேட்ஸ் இத்தகைய பஸ் பர்மிட்டுகளுக்கு கூட்டுறவு சொஸைட்டி மூலமாக விண்ணப்பம் செய்திருந்தார்களே, அது அங்கிகரிக்கப்பட்டதா? அத்தகையவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri V. RAMAIAH : அவர்களும் கூட்டுறவு சொஸைட்டி அமைத்து முயற்சி எடுத்தால் சம்பந்தப்பட்ட ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடி அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்கள். எங்கே, எப்பொழுது விண்ணப்பம் கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது.

Sri P. M. MUNUSAMI GOUNDER : நம் ராஜ்யத்தில் எத்தனை மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு சொஸைட்டிகள் பஸ் போக்குவரத்து நடத்துகின்றன? அவை எந்த நிலைமையில் நடக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா?

The Hon. Sri V. RAMAIAH : எத்தனை சொஸைட்டிகள் என்பதற்கு உடனடியாக தகவல் இல்லை. நான் தெரிந்துகொண்ட வரையில் எல்லா சொஸைட்டிகளும் நன்றாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றன.

T.B. Hospitals

* 421 *Q*.—**Sri A. VEDARATHNAM** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— 9–00 a.m.

(அ) இம்மாநிலத்தில் க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் எங்கெங்கு இருக்கின்றன? எத்தனை இருக்கின்றன?

(இ) ஒவ்வொன்றிலுள்ள படுக்கைகள் எத்தனை?

(உ) ஜில்லாதோறும் இந்த ஆஸ்பத்திரியை ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

(எ) அப்படியானால், அதன் விவரம் என்ன?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) There are eleven Tuberculosis Hospitals in the State. The places where they are situated and the number of beds in each hospitals are furnished in the statement placed [a] on the table of the House.

(*c*) No, Sir.

(*d*) Does not arise.

Sri A. VEDARATHNAM : இப்போது இருக்கின்ற ஆஸ்பத்திரிகள் ஒவ்வொன்றிலும் படுக்கைகள் போதுமானதாக இல்லாததனால் வெயிட்டிங் லிஸ்டில் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள்.

---

a Printed as Appendix II on page 388 infra.

[23rd February 1961

ஆகவே ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் இருக்கும் படுக்கைகளை விஸ்தரிக்க ஏதாவது திட்டம் உண்டா? அப்படியானால் அது எப்போது அமுலுக்கு வரும்?

The Hon. Sri M. A. MANICKAVELU : எனக்குத் தெரிந்த வரையில் க்ஷயரோகம் சம்பந்தப்பட்டவரையில் அதிகமான பேர்கள் வெயிட்டிங் லிஸ்டில், தாம்பரம் நிலையம் தவிர, இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நோய் சிகிச்சைக்கு படுக்கை இல்லாமல் இதர வழிகளில் டாமிஸிலரி ட்ரீட்மெண்டு முறையில் கூடச் செய்யலாம் என்ற பிரச்சனை இருக்கிறது.

Sri T. T. DANIEL : In view of the fact that better facilities are provided for the past four years in the Tuberculosis Hospital, Nagercoil, and also due to the fact that the number of patients there is steadily increasing, will the Government increase the number of doctors and nurses in that hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes. We are trying progressively to afford better facilities.

Sri K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the demand for admission to the Tuberculosis Sanatorium at Tambaram is increasing, that patients are registered according to the time in which they apply and that some of the patients receive admission cards long after they are dead and entered the grave-yard? Will the Government make provision for more beds so as to give admission to all those who deserve it?

The Hon. Sri M. A. MANICKAVELU : No doubt in some cases what the hon. Member says happens. There is the waiting list. But the difficulty is provision of beds in this hospital is a costly one and the number of patients are very large. That is why we are now adopting other improved methods viz., affording domicillary treatment and trying also to increase beds. As far as possible we are doing that.

Sri M. P. SARATHI : வேலூர் பகுதியில் உள்ள பெண்ணாத்தூரில் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது? கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்? ஆஸ்பத்திரி எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அந்த ஊருக்குப் பக்கத்தில் இருந்து வருகிறார், இருந்தாலும் சொல்கிறேன். அந்தக் கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போட்டாகி சீக்கிரத்தில் அது முடிக்கப்படும்.

Sri J. MATHA GOWDER : அந்த அறிக்கையில் நீலகிரி ஜில்லாவில் உள்ள ஆஸ்பத்திரியில் ஒரு படுக்கையும் ஒதுக்கப்படவில்லையே? நீலகிரி ஜில்லாவில் க்ஷயரோகமே இல்லையா? இது

23rd February 1961]

பற்றி ஆராய்ந்திருக்கிறார்களா? அங்கு இருக்கிறதென்றால் அங்குள்ள ஆஸ்பத்திரிகளிலும் இந்த நோய்க்கு என்று தனியாகப் படுக்கை வசதி செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சமீபகாலத்தில் தான் நீலகிரி ஜில்லாவிலும் படுக்கை வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த லிஸ்டில் அது விட்டுப்போயிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்தில் க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இது தொத்து வியாதியைப் போலவும், அவர்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கும்கூட இது வருவதனால் அவர்கள் சம்பந்தப்பட்ட வரை அறுவை சிகிச்சை கட்டாயமாக அளிக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நோய் வராமல் தடுப்பதற்காகத்தான் பி.ஸி.ஜி. வாக்ஸினேஷன், டாமிசிலரி ட்ரீட்மெண்டு எல்லாம் கொடுக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. யார் யார் வேண்டுமோ அவர்கள் அறுவை செய்துகொள்ளலாம்.

SRI A. VEDARATHNAM : கனம் விநாயகம் கூறிய பிரகாரம் செங்கிப்பட்டியில் நிறைய பேஷண்டுகள் வெயிட்டிங் லிஸ்டில் இருக்கிறார்கள். இடமில்லாமல் இப்படி அதிகமான பேர்கள் காத்துக்கொண்டிருப்பதனால் அதை விஸ்தரிக்க ஏதாவது உதவி செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர்கள் பண உதவி கேட்டார்கள். அதை நாங்கள் மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்தோம். ஆனால் அவர்கள் கேட்ட அளவுக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் கேட்ட அளவுக்குக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறோம்.

SRI B. DORAISAMI REDDIAR : ஆரணியில் எல்லா எஸ்டிமேட்டும் போட்டு ஆஸ்பத்திரி கட்டும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. அதை துரிதமாகக் கட்டி முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆரணியில் க்ஷயரோக ஆஸ்பத்திரி இல்லை. அது பொது ஆஸ்பத்திரி.

SRI M. KALYANASUNDARAM : தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் இந்த ஆஸ்பத்திரிகளுக்கு பண உதவி எந்த அளவில் செய்யப்படுகிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is granted on the basis of the bed strength, the number of patients, etc.